## இயல் 6.5 - புள்ளியியல்

பயிற்சி எண் :: 6.5.1.1.D


தரவுகளை முறைப்படுத்துதல்

## புள்ளியியல் - தரவுகளை முறைப்படுத்துதல்

திரட்டப்பட்ட தரவுகளை எல்லோரும் நன்கு புரிந்துகொள்ளும் விதத்தில் காட்சிப்படுத்துவதற்கும் அவற்றை திறம்பட பகுப்பாய்வு செய்து அதிலிருந்து உற்ற தகவல்களை பெறுவதற்கும் தரவுகளை முறைப்படுத்துதல் அத்தியாவசியமாகிறது. ஒரு உதாரணத்தின் மூலம் அதனை விளக்கலாம். அடிப்படை நிகழ்வுகளை முறைப்படுத்தும் விதங்களை இதில் காணலாம்.

## தரவுகளை முறைப்படுத்துதல் - உதாரணம்

கீழ்க்காணும் படத்தில் ஐந்து பொருட்கள் பல எண்ணிக்கைகளில் காணப்படுகின்றன. அவை பல திசைகளில் ஒழுங்கற்ற விதத்தில் சிதறிக்கிடக்கின்றன. நாம் இப்பொழுது ஒவ்வொரு பொருளின் ஒரு எண்ணிக்கையையும் ஒரு நிகழ்வாக வைத்துக்கொண்டு அவற்றின் மொத்த எண்ணிக்கையை கண்டு பிடித்து இந்த தரவுகளை முறைமைப்படுத்தலாம்.



| நிகழ்வெண்கள் வெவ்வேறு முறைகளில் | பொருட்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | கடிகாரம் | பந்து | மிதிவண்டி | நாற்காலி | கத்தரிக்கோல் |
| "✓" குறியீடு | ✓✓✓✓✓✓✓✓ | ✓✓✓✓✓✓✓✓✓✓ | ✓✓✓✓✓✓✓ | ✓✓✓✓✓ | ✓✓✓✓✓✓✓✓✓ |
| நேர்கோட்டுக் குறியீடு | 卌 III | 卌 卌 | 卌 II | 卌 | 卌 IIII |
| எண்ணிக்கை | 8 | 10 | 7 | 5 | 9 |

Sum & solution prepared on Sunday 5th September, 2021 :: 11:16 Hrs.
All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.